DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.7<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முக சுந்தரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பொன்னன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளம் காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 29.08.2020 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு உடுமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவல் பணியில் இருந்த போது அப்பாஸ் வயது 31 த/பெ சிராஜ்தீன் என்பவர் எழுத்து மூலமாக புகாரை பெற்று உடுமலை காவல் நிலைய குற்ற எண் 1400/2020 ச/பி 279,337,304(எ) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகாருடன் அசல் அறிக்கையும் கனம் நீதிமன்றதத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை யின் மற்றொரு நகலை உடுமலை காவல் ஆய்வாளரின பார்வைக்தகும் இதர நகலை உயர் அதிகாரி பார்வைக்கும் அனுப்பு வைத்தேன. **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திடீரென பிரேக் போட்டதால் லாரி மேல் மோதாமல் இருக்க ஜீப்பை வலது புறமாக திருப்பினதாக குறிபிட்டுள்ளது எனறால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பினிர்கள் என்றால் 29.08.2020 அன்று. ஆனால் நீதிமன்றத்தில் 03.09.2020 அன்று வந்துள்ளது என்றாலும் சுமார் 5 நான் காலதாமதமாக வந்தது என்றாலும் நான் நீதிமன்ற காவலரிடம் ஒப்படைத்தேன். எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட வில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் காரணமில்லை என்றாலும் திடீரென பிரேக் போட்டதால் லாரியின் வலது புறம் மோதியது என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.